# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 1193/ந/2016

ஆணை எண். 101/2017

நாள் : 05/05/2017

திரு சுலிஃப் தாமோதரன்,
19/177, தேவி நிலையம்,
பெருந்தெரு, குழித்துறை,
கன்னியாகுமரி மாவட்டம் –629 163. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
குழித்துறை நகராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் 629 163. – எதிர் மனுதாரர்

**ஆணை**:-

முறையீட் மனுதாரரது 23.11.16 நாளிட்ட மனு 25.11.16 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.1193/16 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனுவில் குழித்துறை நகராட்சியில் பணி நியமன முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இது குறித்த அவரது 01.11.2106 நாளிட்ட கடிதத்தில் குழித் துறை நகராட்சியில் காலியாக இருந்த வருவாய் உதவியாளர் பணியிடத்திற்கு குமரி மாவட்டத்தில் உள்ள தகுதியுடைய பல்வேறு நபர்கள் தபால் மூலமும், நேரடியாகவும் விண்ணப்பித்திருந்தும் 30.08.2016 அன்று நடைபெற்ற நேர்முகத் தேர்வில் அருப்புக் கோட்டையைச் சேர்ந்த ஒருவரை தேர்வு செய்து பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த நியமனத்திற்கென நகராட்சி பணியாளர்கள் சிலரும், நகராட்சி ஆணையரும், முன்னாள் நியமன குழு தலைவர் மற்றும் உறுப்பினர் ஆகியோர் லஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவதாகவும் கூறப்பட்டுள்ளது.

2. இப்பொருள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவிப்பாணை எண்.1193/16/ந, நாள் 28.11.2016ல் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும், 09.01.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை சமர்ப்பிக்குமாறு முறையீட்டு மனுதாருக்கு அழைப்பாணையும் (அ.ம.எண்.1193/2016/ந, நாள் 02.12.2016 ) அனுப்பப்பட்டது.

3. குழித்துறை நகராட்சி ஆணையரது கடிதம் ந.க.எண்.2739/2016/சி1, நாள் 14.12.2016 உடன் முறையீட்டிலுள்ள பணி நியமன கோப்பின் நகல், நியமனக்குழு கூட்ட தீர்மான நகல் முன்னாள் நகர்மன்ற தலைவர், முன்னாள் நியமனக் குழு உறுப்பினர், நகராட்சி எழுத்தர் திரு அ. ராமகிருஷ்ணன், திரு சி. தியாகராஜன், கணக்கர் ஆகியோரது விளக்கக் கடிதங்களும் இதர ஆவண நகல்களும் மற்றும் நகராட்சி ஆணையரது அறிக்கையும் (ந.க.எண்.2739/16/சி, நாள் 07.12.2016) வரப்பெற்றன. மேற்படி அனைவரது விளக்கக் கடிதங்களிலும் முறையீட்டு மனுதாரரது குற்றச்சாட்டுகள் முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளன. மேலும், 30.08.2016 அன்று நடைபெற்ற நேர்முக தேர்வில் கலந்து கொண்டவர்களில் இனச் சுழற்சி மற்றும் கல்வித்தகுதி அடிப்படையில் திருமதி பாண்டிச் செல்வி என்பவர் ஒருவர் மட்டுமே அருந்ததியினர் ஆதரவற்ற விதவை என்ற தகுதி பெற்றிருந்ததால் அவர் தேர்வு செய்யப்பட்டார் என முன்னாள் குழித்துறை பணி நியமனக் குழு உறுப்பினர் திருமதி S.P.ஜலீலாராணி தனது 12.12.2016 நாளிட்ட விளக்கக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதனையே 14.12.2016 நாளிட்ட தனது விளக்கக் கடிதத்தில் குழித்துறை நகராட்சியின் முன்னாள் நகர் மன்றத் தலைவரும் / பணி நியமனக்குழுத் தலைவரும் உறுதிபட குறிப்பிட்டுள்ளார்.

4. மேலும், குழித்துறை நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.2739/2016/சி1, நாள்: 07.12.2016ல் கீழ்க்கண்டவாறான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

> *" குழித்துறை நகராட்சியில் காலியாக இருந்து வந்த வருவாய் உதவியாளர் பணியிடம் நிரப்ப இவ்வலுவலக ந.க.எண். 2300/2015/சி1, நாள் 15.09.2015-ன் மூலம் ஐந்து துறைகளிலிருந்து வேலை இழந்து காத்திருப்போர் பட்டியல் கோரப்பட்டதின் அடிப்படையில் எல்காட் சென்னை கடித எண்.HR/A3/4129/99 மற்றும் தொழில் (எம்.ஐ.எப்2) துறை கடிதம் எண்.17027/எம்ஐஎப்2/2015-1, நாள் 26.11.2015 தலைமைச்செயலகம், சென்னை - 600 009 ஆகிய இரண்டு நிறுவனங்களிலிருந்து வேலை இழந்து காத்திருப்போர் பட்டியல் வரப்பெற்றன. மற்ற மூன்று துறைகளிலிருந்து (கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கடிதம் எண்.அ1/23581/2015, நாள் 15.10.2015 தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் சென்னை கடிதம் எண்.19/இ2(1)/2015, நாள் 04.11.2015 மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை கடித எண்.ப.தொ.நு.5/1800/2014-1, நாள் 29.10.2015 படி வேலை இழந்து காத்திருப்போர் பட்டியலில் ஆளின்மை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு நிறுவனங்களிலிருந்து வேலை இழந்து காத்திருப்போர் பட்டியல் வரப்பெற்றதின் அடிப்படையில் மேற்படி பணியாளர்களில் வருவாய் உதவியாளர் பணிக்கு கல்வித் தகுதியான நபர்களை 03.02.2016 அன்று நேர்முகத் தேர்விற்கு ஆஜராக அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி நேர்முகத் தேர்வில் ஒருவரும் கலந்து கொள்ளப்படவில்லை என்பதால் நியமனக்குழு தீர்மானத்தின் (தீர்மானம் எண்.2, நாள் 03.02.2016) படி மாவட்ட வேலை வாய்ப்பகத்திலிருந்து பட்டியல் பெற்றும் நாளிதழ் மூலம் விளம்பரம் செய்தும் விண்ணப்பதாரர்கள் பட்டியல் பெற்று நியமனம் செய்ய நியமனக் குழுவால் தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாவட்ட வேலை வாய்ப்பகத்திலிருந்து (மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் கடிதம் எண்.A2/X2/W/12/16, நாள் 04.07.2016) விண்ணப்பதாரர் பட்டியல் பெற்றும் அரசாணை எண்.44, பணியாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 11.03.2015 படி நாளிதழ் மூலம் விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் பெற்றும் 30.08.2016 அன்று நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. மேற்படி நேர்முகத் தேர்வில் 15 விண்ணப்பதாரர்கள் கலந்து கொள்ளப்பட்டது.*

இனச் சுழற்சி அரசாணை (நிலை) எண்.142, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்(கே) துறை, நாள் 14.10.2009–ன்படி வரிசை எண்.2–ல் காணும் மேற்படி பணியிடம் ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) இனத்தை சார்ந்தவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, 30.08.2016 அன்று நடைபெற்ற நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளப்பட்ட விண்ணப்பத்தாரர்களில் "இனசுழற்சி பட்டியலின்படி தகுதியுள்ள ஒரே நபரான வரிசை எண்.9–ல் குறிப்பிட்டுள்ள திருமதி. வே. பாண்டிச் செல்வி, க/பெ. வேல்முருகன்(லேட்) 1/168, S.C. காலனி, பெரியகட்டங்குடி அஞ்சல் என்பவர் ஆதிதிராவிடர் அருந்ததியினர் இனத்தில் முன் உரிமை பெற்றவராக உள்ளதால் (ஆதரவற்ற விதவை) அன்னாரை குழித்துறை நகராட்சியில் காலியாக உள்ள வருவாய் உதவியாளர் நிரந்தரப் பணியிடத்தில் நியமனம் செய்ய ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது". என நியமனக்குழுவால் 01.09.2016 அன்று தீர்மானம் எண்.4ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி திருமதி. வே. பாண்டிச்செல்வி க/பெ. வேல்முருகன் (லேட்) என்பவரை இந்நகராட்சியில் காலியாக இருந்து வந்த வருவாய் உதவியாளர் பணியிடத்தில் முறையாக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. இதில் எந்த முறைகேடும் நடைபெற வில்லை", என்று தெரிவித்துள்ளார்.

5. இதனைத் தொடர்ந்து 09.01.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார். அதில் குழித்துறை நகராட்சியில் ஏற்கனவே மேலாளராகப் பணி புரிந்தவரான திரு. தியாகராஜன் என்பவர் தற்போது அருப்புக்கோட்டை நகராட்சியில் பணி புரிந்து வருவதாகவும் அவர் மூலமாக திருமதி. வே. பாண்டிச்செல்வி (அருப்புக்கோட்டையைச் சேர்ந்தவர்) மேற்படி பதவியிடத்திற்கு பணி நியமனம் பெற்றார் என தனக்கு சந்தேகமுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அதேபோல் குழித்துறை நகராட்சி உதவியாளர் திரு. ராமகிருஷ்ணன் என்பவர் மீதும் சில குற்றச்சாட்டுக்களை பதிவு செய்துள்ளார். சந்தேகத்தின் அடிப்படையில் குற்றச்சாட்டினை உறுதிபடுத்திட வழிவகை இல்லை. இருப்பினும், மேற்குறிப்பிட்ட இரு பணியாளர்களையும் 13.02.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகத் தெரிவித்து அழைப்பாணை (அ.ம.எண்.1193/2016/ந, நாள் 12.01.2017) அனுப்பப்பட்டது. அதன்படி விசாரணைக்கு ஆஜரான இருவரும் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை முற்றிலும் மறுத்து தங்களது எழுத்துபூர்வ வாக்குமூலங்களை சமர்ப்பித்தனர்.

6. இம்முறைமன்ற நடுவ புகாருக்குட்பட்ட பணி நியமனம் தொடர்பான அசல் கோப்புகளை பரிசீலித்திட முடிவெடுத்து, அக்கோப்புகளையும் அசலாக இம்முறைமன்ற நடுவத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பித்திட வேண்டுமென அறிவிப்பாணை அ.ம.எண்.1193/2016/ந, நாள் 15.02.2017ன் மூலம் நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.2739/2016/சி1, நாள் 15.02.2017 குழித்துறை நகராட்சியின் கோப்புகள் எண் 1358/2013 சி1, 46/2015 சி1 மற்றும் 973/15/சி1 ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தில் ஒப்படைக்கப்பட்டன. 7(i) கோப்பு எண்.1358/13 சி1 – ஐ பரிசீலித்ததில் மாவட்ட வேலை வாய்ப்பகத்திலிருந்து ஒரு வருவாய் உதவியாளர் பணியிடத்திற்கு (SC-A Women Non- Priority) என 5 நபர்களின் பட்டியல் வரப்பெற்று 07.10.2014 அன்று குழித்துறை நகராட்சி நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் நியமனக் குழு தீர்மான எண்.18, நாள் 15.10.2014 மேற்படி 5 நபர்களும் நகராட்சி பகுதியில் குடியிருப்பவர் அல்ல என்பதால் மேற்படி பட்டியல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலருக்கு திரும்ப அனுப்ப நகராட்சி பகுதிக்குள் இருப்பவர்களின் பட்டியலினைக் கோரிட தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. அதன்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(ii) இதனிடையே பத்மநாபபுரம் நகராட்சியிலிருந்து திருமதி பத்மா, வருவாய் உதவியாளர் பணி மாறுதலில் 12.01.2015 அன்று குழித்துறை நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணியில் சேர்ந்ததனால் 21.10.2015 ல் மேற்படி வருவாய் உதவியாளர் பணியிடம் காலியாக இல்லையென மாவட்ட வேலை வாய்ப்பக அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

(iii) இது குறித்து கோப்பு எண்.46/2015/சி1 பரிசீலிக்கப்பட்டது. திருநெல்வேலி, நகராட்சி நிர்வாகம் மற்றும் இயக்குநர் அவர்களது 06.01.2015 நாளிட்ட செயல்முறைகளின் படி பத்மநாபபுரம் நகராட்சி வருவாய் உதவியாளர் திருமதி பி. பத்மா என்பவர் குழித்துறை நகராட்சிக்கு வருவாய் உதவியாளராக பணி மாறுதல் செய்யப்பட்டு 12.01.2015ல் அவர் பணி மாறுதலில் பதவி ஏற்றுள்ளார்.

(iv) கோப்பு எண்.973/2015/சி1 பரிசீலிக்கப்பட்டது. அதில் திருமதி பி.பத்மா, வருவாய் உதவியாளர் தனக்கு காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு பணி மாறுதல் வழங்குமாறு 07.05.2015ல் விண்ணப்பித்துள்ளார். நகராட்சி ஆணையரது 09.06.2015 செயல் முறைகளின் படி ஆணை வழங்கப்பட்டு 12.06.2015 முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் 12.06.2015 முதல் ஒரு வருவாய் உதவியாளர் பணியிடம் மீண்டும் காலியிடமாகியுள்ளது.

8. நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண். 2739/16/சி1, நாள் 07.12.2016 கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன :-

(i) வேலை இழந்து காத்திருப்போர் பட்டியல் சென்னை எல்காட் மற்றும் தலைமைச் செயலக தொழில் துறை ஆகிய இரு அலுவலகங்களிலிருந்து வரப்பெற்று 03.02.2016 அன்று நேர்முகத் தேர்விற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. நேர்முகத் தேர்வில் எவரும் அன்று கலந்து கொள்ளவில்லை.

(ii) நியமனக் குழுவின் தீர்மான எண்.2 நாள் 03.02.2016ன்படி மாவட்ட வேலை வாய்ப்பகத்திலிருந்து பட்டியல் பெற்றும், விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் பெற்றும் 15 நபர்களுக்கு 30.08.2016 அன்று நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

(iii) இன சுழற்சி அரசாணை (நிலை) எண்.142, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 14.10.2009ன் படி வ.எண்.2ல் மேற்படி பணியிடம் ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் – அருந்ததியினர்) இனத்தைச் சேர்ந்தவருக்கு ஒதுக்கப்பட்டதால் இனசுழற்சி பட்டியலின்படி தகுதியான ஒரே நபரான திருமதி வே. பாண்டிச் செல்வி என்பவரை நியமிக்க நியமனக் குழுவால் 01.09.2016 அன்று தீர்மானம் இயற்றப்பட்டு நியமிக்கப்பட்டது.

9. இவ்வாறு மேற்படி கோப்புகள் பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்க்காணும் கேள்விகள் தொடர்பான விளக்கங்களை சமர்ப்பிக்குமாறு நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை அ.மு.எண்.1193/16/ந, நாள் 23.02.2017ன் மூலம் ஆணையிடப்பட்டது.

(i) முதலில் 07.10.2014ல் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டபோது வருவாய் உதவியாளர் காலி பணியிடத்திற்கு SCA Women Non Priority என பட்டியல் பெறப்பட்டுள்ளது. ஆனால், பின்னர் தற்போது முடிந்துள்ள நேர்முகத் தேர்வின்போது அதே பணியிடத்திற்கு SCA (Priority) எனக் குறிப்பிட்டு பட்டியல் பெறப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

(ii) முதல் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்ட பின்னர், அதில் கலந்து கொண்டவர்கள் நகராட்சிப் பகுதியில் குடியிருப்பவர்கள் அல்ல எனத் தெரிவித்து, உள்ளூரில் (நகராட்சி பகுதியில்) இருப்பவர்களடங்கிய பட்டியல் கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள நபர் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்தவராக இருப்பினும் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறான மாறுபட்ட நிலைப்பாடுகளுக்கான காரணங்களடங்கிய அறிக்கை சமர்ப்பித்திட இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டது.

10. அதன்படி குழித்துறை நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண். 2739/16/சி1, நாள் 22.03.2017ல் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன :-

(1) 07.10.2014ல் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டபோது வருவாய் உதவியாளர் காலி பணியிடத்திற்கு SCA AW Destitute Widows பட்டியல் கோரப்பட்டதற்கு மாவட்ட வேலை வாய்ப்பகத்திலிருந்து வரப்பெற்ற கடிதத்தில் (கடிதம் எண்.X2/W17-2014, dated 21.07.2014) SCA Destitute Widows விண்ணப்பதாரர்கள் எவரும் இல்லை என்று தெரிவித்து SCA Women Non- Priority பட்டியல் பெறப்பட்டுள்ளது.

(2) மாவட்ட வேலை வாய்ப்பகத்திற்கு பட்டியல் கோரப்பட்டு இவ்வலுவலகத்திலிருந்து மாவட்ட வேலை வாய்ப்பகத்திற்கு அனுப்பப்பட்ட அறிவிக்கை படிவத்தில் கலம் 11–ல் Kuzdithurai Municipal Area Preferred என கோரப்பட்டுள்ளது. ஆனால், வருவாய் உதவியாளர் காலிப் பணியிடத்திற்கு அரசாணை எண்.44, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு(டி2) துறை, நாள் 11.03.2015ன் படி நாளிதழ் மூலம் இரண்டாவதாக விளம்பரம் செய்யப்பட்டதில் நகராட்சி பகுதியில் குடியிருப்பவர்களின் விண்ணப்பங்கள் மட்டும் கோரப்படவில்லை. அதனால் நகராட்சி அப்பாற்பட்ட பகுதிகளிலிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றன. திருமதி வே. பாண்டிச் செல்வி என்பவரை அனைத்து தகுதிகளும் இருப்பதாகக் கருதி நியமனக்குழுவின் தீர்மானத்தின்படி முறையாக நியமனம் செய்யப்பட்டது.

மேற்படி அறிக்கையுடன் வரப்பெற்ற தொடர்புடைய ஆவண நகல்களும் பரிசீலிக்கப்பட்டன.

மேற்கண்டவாறு தொடர்புடைய ஆவணங்கள், அறிக்கைகளின் அடிப்படையிலும், நடைபெற்ற விசாரணைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையிலும் பரிசீலித்ததில் முறைகேடு ஏதும் நிரூபணமாகவில்லை எனத் தீர்மானிக்கப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2017–** ஆம் ஆண்டு, மே திங்கள், **5–**ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.**

பெறுநர்

1. **திரு கலீஃப் தாமோதரன்,**
**19/177, தேவி நிலையம்,**
**பெருந்தெரு, குழித்துறை,**
**கன்னியாகுமரி மாவட்டம் –629 163..**

2. **நகராட்சி ஆணையர்,**
**குழித்துறை நகராட்சி,**
**கன்னியாகுமரி மாவட்டம் 629 163..**